## புதுக்கோட்டை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(01-10-2016 – 05-10-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 30-09-2016

**கடந்த கால வானிலை 27-09-2016 முதல் 29-09-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 1.3 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27 |
| மேக மூட்டம் | 6-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 44-67 |
| காற்றின் வேகம்(கி.மீ / மணி) | 10-17 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 05-10-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 01.10.16 | 02.10.16 | 03.10.16 | 04.10.16 | 05.10.16 |
|---|---|---|---|---|---|
| | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை(செ) | 37 | 37 | 37 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| மேக மூட்டம் | 5 | 5 | 5 | 5 | 5 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 47 | 47 | 47 | 47 | 47 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 15 | 15 | 15 | 15 | 15 |
| காற்றின் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி :**

- வரும் ஐந்து நாட்களுக்கு வானம் ஓரளவு மேக மூட்டத்துடனும், இலேசான காற்றுடனும் வறண்ட வானிலையே நிலவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல் மற்றும் கரும்பு**

**பருவம்: குறுவை: முதிர்ச்சி பருவம், சம்பா: விதைத்தல் மற்றும் நடவு**

- கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி சம்பா நெல் நாற்றாங்காலில் மத்திய கால வயதுடைய நெல் இரக விதைகளை விதைக்கவும்.
- சம்பா வயல்களில் நேரடிவிதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதை அளவும் பரிந்துரைக்கப்படுகிறது. விதைப்பதற்கு முன் விதைகளை *சூடோமோனாஸ்* என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- கால்நடை குடில்களைச் சுற்றி நீர் தேங்குவதை தவிர்க்கவும். அதன் மூலம் கொசுக்கள் பெருகுவதை தடுக்கலாம்.